[2019 ஜூலை 11

ஆட்சியிலும் சரி, எங்களுடைய ஆட்சியிலும் சரி போக்குவரத்துக் கழகங்கள் எப்பொழுதுமே நிதி நெருக்கடியில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அவ்வப்பொழுது, அந்தந்தத் தேவைக்கேற்ப, அரசு நிதிகளைக் கொடுத்து, போக்குவரத்துக் கழகத்தினுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, நிறுத்தப்பட்ட வழித்தடங்களிலே frequency *ஆக இரண்டு நிமிடங்களுக்கு ஒரு பேருந்து இயக்கிக் கொண்டிருக்கின்ற வழித்தடங்களையெல்லாம் மறு ஆய்வு செய்து, அப்படிப்பட்ட பேருந்துகள் மட்டும்தான் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.* (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பார்க்கலாம். நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, என்ன என்பதை கேட்டு முடிவு சொல்கிறேன்.* (குறுக்கீடு) *கேட்கிறேன், கேட்கிறேன்.* (குறுக்கீடு) *கேட்டு சொல்கிறேன்.*

3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்தல் உள்ளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*